# திருமுருகாற்றுப்படை

பதவுரையாசிரியர்

சரவணப்பெருமாளையர்

உ

சிவமயம்.

நக்கீரதேவர்

அருளிச்செய்த

# திருமுருகாற்றுப்படை

இஃது

திருத்தணிகை

சரவணப்பெருமாளையரவர்கள்

பதவுரையுடன்,

திருமயிலை

செந்தில்வேலுமுதலியாரால்,

தமது

விக்டோரியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902

சென்னை.



ஒருமுருகாவென்றென் னுள்ளங்குளிர வுவ
துடனே, வருமுருகாவென்று வாய்வெருவாநிற்ப
கையிங்ஙனே, தரு முருகாவென்று தான்புலம்ப
நிற்பத் தையன் முன்னே, திருமுருகாற்றுப் படை
யுடனே வருஞ் சேவகனே.

# நூல்வரலாறு.

மதுரைக் கடைச் சங்கத்துத் தலைமைப் புலவராகிய நக்கீரதேவர் ஓர் கால் இமயமலைச்சாரலில் ஒரு பெருங்காட்டினுள்ளே ஓர் தடாகக் கரையில் சிவபூஜை செய்துகொண்டிருக்கும்போது, அருகே இருந்த தெய்வத்தன்மை பொருந்திய ஆலமரத்தினிருந்து ஓர் பழுப்பு அவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி நீர்ப்புறத்திலுமாக வீழ்ந்தது. உடனே நீரில்வீழ்ந்தபாதி மீன்வடிவமும் நீர்ப்புறத்து வீழ்ந்த பாதி பறவை வடிவமும் பெற்று இருபுறத்திலுமிழுத்துக்கொண் டிருக்க, நக்கீரதேவர் அவ்வாச்சரியத்தில் கருத்தைச் செலுத்தினதால் சிவபூசைக்குத் தவறுண்டாயிற்று.

அதற்கு முன்பு அவ்விடத்தே இவ்வாறு சிவபூஜையில் வழுவினவர்களாகிய (௯௯௯) பேரை ஒரு மலைக்குகையில் அடைத்து, இன்னும் ஒருவன் வேண்டுமெனக் காத்திருந்த ஒரு பூதமானது நக்கீரரை எடுத்துக்கொண்டுபோய் அக்குகையிலடைத்து (௧000) பேராக்கித் தன்னியமப்படி அவ்வாயிரவரையும் உண்ணுவதற்காக நீராடப்போயிற்று.

அப்போது அச்சிறையிலடைபட்டிருந்த (௯௯௯) பேரும் நக்கீரதேவரைப்பார்த்து நாங்கள் நெடுங்கால

மாய்ச் சிறையிலிருந்தபோதிலும் இப்பூதத்தால் உணவு முதலியவை பெற்றுப் பிழைத்திருந்தோம், இன்றைக்கு உம்மால் இப்பூதத்திற்கிரையாக வேண்டிய காலம் நேரிட்டதென்று வருந்தி அழுதார்கள்.

அதைக்கண்டு நக்கீரதேவர் மனமிரங்கி முருகக் கடவுளைக்குறித்துத் திருமுருகாற்றுப்படையென்னும் இப்பிரபந்தம் பாடினார். உடனே முருகக் கடவுள் பிரசன்னமாய் அவ்வாபத்தை நீக்கி அவர்களெல்லோரையுங் காப்பாற்றியருளி நக்கீரரை நோக்கி இப் பிரபந்தத்தைத் தினந்தோறும் அன்புடனே ஓதுபவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுவோம், என்று வாக்குதத்தஞ் செய்தருளினார்.

## நூற்கருத்து.

திருமுருகாற்றுப்படை யென்பது முத்தியை அடைந்தாரொருவன் முத்தியை அடைய அபேட்சையுள்ள மற்றொருவனை அம்முத்தியை அடையும் பொருட்டு ஸ்ரீ சுப்பிரமண்ணியசுவாமி யிடத்தே வழிப்படுத்துதலை யுடைய பிரபந்தம் என்பதாம்.

உ

கணபதிதுணை.

# திருமுருகாற்றுப்படை.

## பதவுரை.

இணைக்குறளாசிரியப்பா.

முதலாவது

## திருப்பரங்குன்றம்.

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்;

கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பாரரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்;

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்

சு கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிறைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பி
ஞவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதன்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்;
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவே
லுலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
யொண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
விருபே ருருவி னொருபே ரியாக்கை
யறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
யவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்;

சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
வின்னே பெறுதிநீ முன்னிய வினையே;

செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமல
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரியன தாஅன்று.

இதன்பொருள்.

('' முதல் 'கணவன்' வரையில் ஒருதொடர்.)

உரை.

| | | |
|---|---|---|
| வலன் | 1 | (மாமேருவை)வலமாக |
| திரிதரு | 2 | சுற்றுதலைச்செய்யும், (திரிதலைச்செய்யும் |
| பலர் | 3 | எல்லாச் சமயத்தாராலும் |
| புகழ் | 4 | புகழப்பட்ட |
| ஞாயிறு | 5 | சூரியனை |
| கடல் | 6 | கடலிடத்தே. |
| கண்டாங்கு | 7 | கண்டாற்போல, |
| ஓவற | 8 | இந்திரியங்களின் வழியேசெல்லாமல் (ஒழிவில்லாமல்) |
| இமைக்கும் | 11 | கண்களைமூடி (மனசினாலே)பார்த்தற்குக் காரணமாக) (இமைத்தும் |
| அவிர் | 12 | பிரகாசிக்கின்ற |
| ஒளி | 13 | காந்தியையும், |
| சேண் | 9 | (கண்களினாலே பார்த்தற்குக் காரணமாகத்) தூரத்திலுஞ் சென்று) |
| விளங்கு (ஒளி) | 10 | விளங்காநின்ற (காந்தியையும்,) |
| உறுநர் | 14 | தன்னைச் சரணென்றடைந்தோரை |
| தாங்கிய | 15 | தாங்கும்பொருட்டு |
| மதன் | 16 | (அவர்களுடைய) அறியாமையை |
| உடை | 17 | கெடுக்கும் (உடைக்கின்ற |
| நோன் | 18 | வலிமையாகிய (வலிமையுடைய |
| தாள் | 19 | திருவடியையும், |

# திருமுருகாற்றுப்படை

| | |
|---|---|
| செறுநர் 20 | பகைவரை |
| தேய்த்த 21 | அழித்த |
| செல்உறழ் 22 | இடியைமாறுபட்ட |
| தடம் 23 | பெருமைபொருந்திய |
| கை 24 | கையினையுமுடைய, |
| மறு இல் 25 | குற்றமற்ற |
| கற்பின் 26 | கற்பினையுடைய ம் |
| வாணுதல் 27 | தெய்வயானைக்கு |
| கணவன் 28 | மணவாளன்; முருகன் |

('கார்கோள்' முதல் 'மார்பினன்' வரையில் ஒருதொடர்.)

| | |
|---|---|
| கார்கோள் 29 | கடலிலே |
| முகந்த 30 | முகந்ததனாலுண்டாகிய |
| கமம் 31 | நிறைவாகிய |
| சூல் 32 | சூலினையுடைய ம் |
| மா 33 | பெரிய = பெருமையையுடைய |
| மழை 34 | மேகங்கள் (மேகங்களானவை |
| போழ் 35 | (இருளை) நீக்குகின்ற |
| வாள் 36 | சந்திரசூரியர் (சஞ்சரிக்கின்ற) |
| விசும்பின் 37 | ஆகாயத்தினிடத்து |
| வள் 38 | நெருக்கமாகிய (பெருமையையுடைய |
| உறை 39 | மழைத்துளிகளை |
| சிதறி 40 | (முற்படச்) சிதறி |
| தலைப்பெயல் | (கார்காலத்து) முதற்பெய்தலை |

| | |
|---|---|
| தலைஇய 43 | சொரிந்துவிட்ட |
| தண் 44 | குளிர்ச்சியையுடைய |
| நறும் 45 | வாசனைபொருந்திய |
| கானத்து 46 | காட்டிடத்து, |
| இருள்பட 47 | இருளுண்டாக |
| பொதுளிய 48 | தழைத்த |
| பரு 49 | பருத்த |
| அரை 50 | அடியினையுடைய |
| மராத்து 51 | செங்கடம்பினது |
| உருள் 52 | தேருருள்போலும் (வட்டமாகிய |
| பூ 53 | மலராற்கட்டப்பட்ட |
| தண் 54 | குளிர்ந்த |
| தார் 55 | மாலையானது |
| புரளும் 56 | அசையும் |
| மார்பினன் 57 | மார்பையுடையவன்; |

('மால்வரை' முதல் 'சென்னியன்' வரையில் ஒருதொடர்.)

| | |
|---|---|
| மால் 58 | பெருமையாகிய |
| வரை 59 | மூங்கில்கள் |
| சிவந்த 60 | வளர்ந்த |
| சேண் 61 | தேவருலகம் வரைக்கும் |
| உயர் 62 | (செல்ல)வுயர்ந்த |
| வெற்பில் 63 | மலையில், |
| கிண்கிணி 64 | சிறுசதங்கை |

## அ திருமுருகாற்றுப்படை

| | |
|---|---|
| கவைஇய 65 | சூழ்ந்த |
| ஒண் 66 | ஒளியையுடைய / நாகிய |
| செம் 67 | சிவந்த ✓ |
| சீறடி 68 | சிறியவடியினையும், ✓ |
| கணை 69 | திரட்சியாகிய ✓ |
| கால் 70 | காலினையும், · லையும் |
| வாங்கிய 71 | வளைந்து நுடங்கிய ✓ |
| நுசுப்பினையும் 72 | இடையினையும், ✓ |
| பணை 73 | மூங்கில்போன்ற ✓ |
| தோள் 74 | தோளினையும், ளையும் |
| கோபத்து அன்ன 75 | இந்திரகோபம்போன்ற ✓ |
| தோயா ✓ 76 | சாயத்திற் றோய்க்கப்படாமல் (இயல்பாகச்சிவந்த) ✓ |
| பூந்துகில் 77 | மேன்மையாகிய ஆடையையும், |
| பல்காசு 78 | பலமணிகள் ✓ |
| நிரைத்த ✓ 79 | கோத்த ✓ |
| சில்காழ் ✓ 80 | (இரண்டு வடமாகிய) காஞ்சியையணிந்த ✓ |
| அல்குல் 81 | அல்குலினையும், |
| கை 82 | ஒருவர்கையினால் யால் |
| புனைந்து ✓ 83 | சிறப்பித்து |
| இயற்றா 84 | உண்டாக்காத |
| கவின் 85 | அழகை |

| | |
|---|---|
| பெறு | (தமக்கியல்பாகப்) பெறுகின்ற |
| வனப்பின். | அழகினையும், |
| நாவலொடு பெயரிய | சாம்பூநதமென்னும் பெயர்பெற்ற |
| பொலம் | பொன்னால் |
| புனை | திருமிக்கப்பட்டு |
| அவிர் | விளங்காநின்ற |
| இழை | ஆபரணத்தையும், |
| சேண் | தூரமாகியவிடத்தையும் |
| இகந்து | தாண்டி |
| விளங்கும் | விளங்குகின்ற |
| செயிர் | குற்றம் |
| தீர் | தீர்ந்த |
| மேனி | நிறத்தையுமுடைய, |
| சூர் | (கண்டார்க்கு) அச்சத்தையுண்டாக்கும் |
| அரமகளிர் | தெய்வமகளிர் |
| பலருடன் | பலருங்கூடி |
| துணையோர் | பாங்கியர்கள் |
| ஆய்ந்த | நன்றென்றுவகிர்ந்த |
| இணை | கடையொத்த |
| நார் | நெய்ப்பசையினையுடைய |
| ஓதி | மயிரிலே, |

| | |
|---|---|
| செங்கால் ௱௪ | சிவந்த தாளையுடைய |
| வெட்சி ௱௫ | வெட்சியினுடைய |
| சிறிதழ் 106 | சிறியபூக்களை (வீடு பூவாகத் தூவி,) |
| இடை 107 | (அதற்கு) நடுவே |
| பைந்தாள் 108 | பசிய தண்டினை யுடைய |
| குவளை 109 | குவளையினது |
| தூவிதழ் 110 | தூயவிதழ்களை |
| கிள்ளி 111 | கிள்ளி |
| இடுபு 112 | இட்டு, |
| தெய்வம் 113 | தெய்வத்தன்மை பொருந்திய |
| உத்தியொடு 114 | (சீதேவியென்னுந்) தலைக்கோலத்துடனே |
| வலம்புரி 115 | வலம்புரிச் சங்கின் வடிவாகச் செய்யப்பட்ட சிரோபூஷ ஆபர — ணத்தையும் |
| வயின் வைத்து 116 | வைத்தற்குரியவிடத்தேவைத்து, |
| திலகந் தைஇய 117 | திலகமிட்ட |
| தேங்கமழ் 118 | மணம் வீசுகின்ற |
| திரு 119 | அழகினையுடைய |
| நுதல் 120 | நெற்றியில் |
| மகரம் 121 | சுறாமீனினது |
| பகுவாய் 122 | அங்காந்த வாய் போலச் செய்யப் யாகப் பட்ட தலையாபரணத்தையும் [illegible] |

| | |
|---|---|
| தாழ | தங்க |
| மண்ணுறுத்து | அலங்கரித்து, |
| துவரமுடித்த | வேண்டுவனகூட்டிமுற்ற முடித்த |
| துகளறும் | குற்றமற்ற |
| உச்சி | கொண்டையிலே |
| பெரும் | பெரிய |
| தண் | குளிர்ந்த |
| சண்பகம் | சண்பகப்பூவை |
| செரீஇ | செருகி, |
| கருந்தகடு | கருமையாகிய இதழினைப் (புறத்திலும்) |
| ஐ தகடு | அழகிய இதழினை |
| உள் | அகத்தினும்பொருந்திய |
| பூ | பூக்களையுடைய |
| மருதின் | மருதினது |
| ஒள் | ஒள்ளிய |
| இணர் | பூங்கொத்துக்களை |
| அட்டி | அதன்மேலே யிட்டு, |
| கீழ் நீர் | நீர்க்கீழ்நின்று |
| கிளை | கிளைத்து |
| கவின்று | அழகுபெற்று |
| எழுதரு | தோன்றுகின்ற |
| செவ்வரும்பு | சிவந்தவரும்பால் |

| | |
|---|---|
| இணைப்புறு 145 | கட்டப்பட்ட ✓ |
| பிணையல் 146 | மாலையை ✓ |
| வளைஇ 147 | வளையச்சுற்றி, வைத்து |
| துணைத்தக 149 | தம்மிலொத்தற்குப்பொருந்தஇட்டு |
| வண்காது 148 | வளவியகாதிலே ✓ |
| நிறைத்த 150 | நிறைந்த ✓ |
| பிண்டி 151 | அசோகினது ✓ |
| ஒண்தளிர் 152 | ஒள்ளியதளிரானது யாகிய |
| நுண்பூண் 153 | நுட்பமாகிய ஆபரணத்தையுடைய |
| ஆகம் 154 | மார்பிடத்தே ✓ |
| திளைப்ப 155 | அசைந்துநிற்க, ✓ |
| திண்காழ் 156 | பலமானவயிரத்தையுடைய |
| நறும் 157 | வாசனைபொருந்திய |
| குறடு 158 | சந்தனக்கட்டையை [illegible] |
| உரிஞ்சிய 159 | உரைத்த ✓ |
| பூங்கேழ் 160 | பொலிவாகியநிறத்தையுடைய |
| தேய்வை 161 | குழம்பை ✓ |
| தேங்கமழ் 162 | வாசனைவீசுகின்ற ✓ |
| மருதிணர் 163 | மருதம்பூவை ✓ |
| கடுப்ப 164 | (அப்பினாற்) போல ஒப்ப |
| கோங்கின் 165 | கோங்கினது ✓ |
| குவிமுகிழ் 166 | குவிந்த அரும்பையொத்த |
| இளமுலைக்கு 167 | இளமையாகியமுலையில் ✓ |
| ஒட்டி / வொட்டி | அப்பி, ✓ |

| | |
|---|---|
| வேங்கை 170 | வேங்கையி னுடைய ப் பூவினது |
| விரி மலர் 169 | விரிந்த பூவினது |
| நுண் தாது 171 | நுட்பமாகியதாதை யும் |
| அப்பி 172 | (அவ்வீரம் புலர்வதற்கு முன்) அதன்மே லப்பி, ✓ |
| வெள்ளில் 173 | விளவினது ✓ |
| குறுமுறி 174 | சிறியதளிரை ✓ |
| கிள்ளுபு 175 | கிள்ளி ✓ |
| காண்வர 176 | அழகு வர |
| தெறியா 177 | ஒருவர்மேலொருவர்தெறித்து, ✓ |
| வென்று ✓ 178 | (அது தப்பாமற் பட்டபொழுது)வஞ்சியாதெதிர்நின்று ✓ |
| அடு ✓ 179 | (கொல்லுகின்ற) ✓ |
| விறல் ✓ 180 | வெற்றியையுடைய ✓ |
| கோழியோங்கிய 181 | கோழிமேலாய்நின்ற ✓ |
| கொடி 182 | கொடியானது ✓ |
| பெரிது 183 | நெடுங்காலம் ✓ |
| வாழியென்று 184 | வாழக்கடவ தென்று |
| எத்தி 185 186 | வாழ்த்தி, ✓ |
| சீர் திகழ் 190 | சிறப்புவிளங்குகின்ற |
| சிலம்பகம் 191 | மலையிடமெல்லாம் |
| சிலம்ப 192 | எதிரொலிசெய்யும்படி |
| பாடி 193 | பாடி, ✓ |

# திருமுருகாற்றுப்படை

| | |
|---|---|
| ஆடும் 194 | ஆடுதற்கிடமாகிய |
| சோலை 195 | சோலையையுடைய |
| மந்தியும் 196 | குரங்குகளும் |
| அறியா 197 | (மரங்களி னீட்டத்தாலேறி) யறியாத |
| மரம் பயில் 198 | மரங்கள்நெருங்கிய |
| அடுக்கத்து 199 | பக்கமலையிடத்துநின்ற |
| காந்தள் 203 | செங்காந்தளினது |
| சுரும்பு மூசா 200 | வண்டினமொய்யாத |
| சுடர் 201 | நெருப்புப்போலும் |
| பூ 202 | பூவினாற்கட்டப்பட்ட |
| பெரும் 204 | பெரிய |
| தண் 205 | குளிர்ந்த |
| கண்ணி 206 | மாலையை |
| மிலைந்த 207 | சூடிய |
| சென்னியன் 208 | திருமுடியையு முடையவன்; |

('பார்முதிர்' முதல் 'சேஎய்' வரையில் ஒருதொடர்.)

| | |
|---|---|
| பார் 278 | நிலம் |
| முதிர் 279 | முற்றுப்பெற்ற |
| பனி 280 | குளிர்ச்சியையுடைய |
| கடல் 281 | கடலானது |
| கலங்க 282 | தன்னிலைகுலையும்படி |
| உள்புக்கு 283 | உள்ளேபோய் |

| | |
|---|---|
| 209 210 | |
| உலறிய கதுப்பின் | காய்ந்த மயிரினையும் |
| பிறழ்பல் 212 | வரிசையொவ்வாதபல்லினையும் |
| பேழ்வாய் 214 | பெரியவாயினையும் |
| சுழல்விழி 216 | கோபத்தாற்சுழலும் விழியினையும் |
| பசுங் கண் 217 | பசியகண்ணினையும் |
| சூர்த்த 218 | கொடுமையாகிய |
| நோக்கின் 219 | பார்வையினையும் |
| கழல்கண் 221 | பிதுங்கிய கண்களையுடைய |
| கூகையொடு 222 | கூகையோடு |
| கடும் பாம்பு 223 | கடிய பாம்பு |
| தூங்க 224 | தூங்குதலினாலே |
| பெருமுலை 225 | பெரியமுலைகளை |
| அலைக்கும் 226 | வருத்துகின்ற |
| காதின் 227 | காதினையும் |
| பிணர் 228 | சருச்சரையையுடைய |
| மோட்டு 229 | பெரியவயிற்றினையும், |
| உருகெழு 230 | கோபம்பொருந்திய |
| செலவின் 231 | நடையினையுமுடைய |
| அஞ்சுவரு 232 | கண்டார்க் கச்சந் தோன்றுகின்ற |
| பேய்மகள் 233 | பேய்மகளானவள், |
| குருதியாடிய 234 | இரத்தத்தை யளைந்த |
| கூருகிர் 235 | கூரியநகத்தையுடைய |
| கொடுவிரல் 236 | கொடியவிரலினாலே |
| கண் 237 | கண்களை |

| | |
|---|---|
| தொட்டு 238 | தோண்டி |
| உண்ட 239 | உண்ணப்பட்ட |
| கழி 240 | மிகுந்த |
| முடை 241 | நாற்றத்தையுடைய |
| கருந்தலை 242 | கருத்த தலையை |
| ஒண் 243 | ஒள்ளிய ஒளியாகிய |
| தொடி 244 | வளையலையுடைய |
| தடம் 245 | பெரிய [illegible] |
| கையில் 246 | கையிலே |
| ஏந்தி 247 | எடுத்து, |
| வெருவர 248 | (இராட்சதர்)பயப்பட |
| வென்று 249 | வஞ்சியாதெதிர்நின்று |
| அடு 250 | கொல்லுகின்ற |
| விறல் 251 | வெற்றியையுடைய |
| களம்பாடி 252 | போர்க்களத்தைப்பாடி |
| தோள்/பெயரா 253 254 | தோளை/அசைத்து |
| நிணம் தின் 255 | நிணத்தைத் தின்ற |
| வாயள் 256 | வாயினையுடையளாய் |
| துணங்கை/தூங்க 258 | (இருகைமுடக்கியாடுதலாகிய) துணங்கைக் கூத்தையாட, |
| இருபேர் 259 | சூரன் பத்மன் என்னுமிரண்டு பெயர்களையுடைய [illegible] |
| உருவின் 260 | உருவமாகிய [illegible] |
| ஒரு/பேர் 262 | ஒரு/பெரிய ஒன்றாகிய |

| | |
|---|---|
| ஆக்கை | சரீரம் |
| அறு வேறு | அற்றுவேறான |
| வகையின் | வகையாம்படி |
| அஞ்சு வர | பயமுண்டாக |
| மண்டி | நெருங்கி, |
| சூர்முதல் | சூரனாகிய தலைவனை |
| தடிந்த | கொன்ற |
| சுடர் | எரிகின்ற |
| இலை | இலைபோன்ற |
| நெடு வேல் | நீண்டவேலினாலே, |
| அவுணர் | இராட்சதருடைய |
| நல் வலம் | நல்லவெற்றி |
| அடங்க | குன்றும்படி |
| கவிழ் | கீழ்நோக்கிய |
| இணர் | பூங்கொத்தையுடைய |
| மா முதல் | மாவாகியமுதலை |
| தடிந்த | வெட்டிய, |
| மறு இல் | குற்றமில்லாத |
| கொற்றத்து | வெற்றியையும் |
| எய்யா | ஒருவராலுமறியப்படாத |
| நல் இசை | நல்ல சீர்த்தியையும் |
| செவ் வேல் | சிவந்த வேலையுமுடைய |
| சேஎய் | சுப்பிரமணியக்கடவுள், |

('சேவடி' முதல் 'வினையே' வரையில் ஒருதொடர்.)

| | |
|---|---|
| சே அடி | (அவரது) சிவந்ததிருவடிகளை |
| படரும் | சிந்திக்கும் |
| செம்மல் | தலைமையாகிய |
| உள்ளமொடு | மனதுடனே |
| நலம் | நல்வினையை |
| புரி | பலபிறப்பினுஞ்செய்த |
| கொள்கை | தன்மையால் |
| புலம் | மெய்ஞ்ஞானத்தை |
| புரிந்து | சாதித்து |
| உறையும் | (அத்திருவடிக்கீழ்த்) தங்கும் |
| செலவு | நெறியை |
| நீநயந்தனையாயின் | நீவிரும்பினையானால், (செய்த |
| நீ முன்னிய | நீ (முற்பிறப்பில்) நினைத்துச் |
| வினை | நல்வினையாலே |
| பல வுடன் | நற்குணங்கள்பலவுஞ்சேர |
| நன்னர் | நன்றாகிய |
| நெஞ்சத்து | மனதிலுண்டாகிய |
| இன் | இனிய |
| நசை | (மோக்ஷ) இச்சையினாலே, |
| இன்னே | (மெய்ஞ்ஞானம்) இப்போதே |
| வாய்ப்ப | வாய்க்க |
| பெறுதி | முத்தியைப்பெறுவாய், |

(அதைப்பெறுதற் கவர்வீற்றிருக்குந்தலங்களாவன:—)

('செரு' முதல் 'உரியன' வரையில் ஒருதொடர்.)

| | |
|---|---|
| செரு புகன்று 315 | சண்டையைக் கூறி |
| எடுத்த 316 | கட்டிய ( |
| சேண் உயர் 318 | ஆகாயமட்டும் உயர்ந்த |
| நெடும் கொடி 320 | நீண்ட கொடிக் (கருகே) |
| வரி 321 | (நூலால்) வரிந்து |
| புனை 322 | அலங்கரிக்கப்பட்ட |
| பந்தொடு 323 | பந்தும் |
| பாவை 324 | பாவையும் |
| தூங்க 325 | (மறுப்பாரின்மையிற் பகைவரை மகளிராக்கி அவர்கொண்டுவிளையாடுதற்குக் காரணமாகத்) தொங்க, |
| பொருநர் 326 | பகைவரை |
| தேய்த்த 327 | இல்லாமற்செய்தலால் |
| போர் 328 | (எக்காலமுஞ்) சண்டை |
| அரு 329 | அரிதாகிய |
| வாயில் 330 | வாயிலினையும், |
| திரு 331 | இலக்குமி |
| வீற்றிருந்த 332 | மகிழ்ந்திருந்த |
| தீது தீர் 334 | குற்றம் தீர்ந்த |
| நியமத்து 335 | அங்காடித்தெருவினையும், |

| | |
|---|---|
| மாடம் | மாடங்கள் |
| மலி | மிகுந்த |
| மறுகின் | ஏனைத்தெருக்களையு முடைய |
| கூடல் | மதுரையின் |
| குடவயின் | மேற்றிசையிடத்து |
| அம் | அழகிய |
| சிறைவண்டின் | சிறகையுடையவண்டின் |
| அரி கணம் | அழகிய கூட்டமானதும் |
| இரும் | கரிய |
| சேற்று | சேற்றினையுடைய |
| அகல் | அகன்ற |
| வயல் | கழனியிலே |
| விரிந்து | முறுக்கு நெகிழ்ந்து |
| வாய்அவிழ்ந்த | மலர்ந்த |
| முள் | முள்ளாகிய |
| தாள் | தாளையுடைய |
| தாமரை | தாமரைப்பூவில் |
| துஞ்சி | (இராப்பொழுது) தூங்கி, |
| வைகறை | விடியற்காலத்தில் |
| கள் | தேன் |
| கமழ் | நாறுகின்ற |
| நெய்தல் | நெய்தற்பூவை |
| ஊதி | ஊதி, |

| | |
|---|---|
| எல் பட | சூரியன்றோன்றினபோது |
| கண் போல் | கண்போல |
| மலர்ந்த | விரிந்த |
| காமர் | விருப்பம்பொருந்திய |
| சுனை மலர் | சுனைப்பூக்களிலே |
| ஒலிக்கும் | சென்றுரவாரிக்கும், |
| குன்று | திருப்பரங்குன்றிலே |
| அமர்ந்து | விரும்பி |
| இருத்தலும் | வீற்றிருத்தலும் |
| உரியன் | உரிமையுடையார். |
| அதாஅன்று | அதுவன்றி, |

'வாணுதல் கணவன்' 'தார்புரளு மார்பினன்' 'கண்ணி மிலைந்த சென்னியன்' 'செவ்வேற் சேஎய்' ஆகிய சுப்பிரமணியக் கடவுளுடைய திருவடியைச் சிந்தித்து அதன் கீழ் தங்கும் நெறியை நீ விரும்பினையானல் நீ முற்பிறப்பிற் செய்த புண்ணியத்தினல் உன் மனதினுண்டாகிய மோட்ச இச்சையினலே மெய்ஞ்ஞானம் வாய்க்க இப்போதே முத்தியைப் பெறுவாய்: ஆனல் அவரை வழிபட்டு அம் முத்தியைப் பெறுதற்கு அவர் வீற்றிருக்கும் தலங்கள் எவை எனின் அவர் திருப்பரங் குன்றத்தில் வீற்றிருத்தலும் உரியர்: அன்றியும்,—

## இரண்டாவது

## திருச்சீரலைவாய்.

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்.
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே.
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக
மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்

திங்கள்போலத் திசைவிளக்கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக் (கங்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றேயொருமு
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றேயாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலி
னாரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க் கேந்திய தொருகை
யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத் துக்குறங் கின்மிசை
யசைஇய தொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை
யையிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி
யந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல

வுரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே.
யதா அன்று,

## இதன்பொருள்.

('வைந்நுதி,' முதல் 'பண்பே,' வரையில் ஒருதொடர்.)

| பதம். | உரை. |
|---|---|
| வை | கூர்மையாகிய |
| நுதி | முனையையுடைய அங்குசம் |
| பொருத | வெட்டின |
| வடு ஆழ் | வடு வழுந்தின |
| வரி | புகரையுடைய |
| நுதல் | மத்தகத்தே |
| வாடா மாலை | வாடாத பொன்னரிமாலை |
| ஓடையோடு | பட்டத்தோடு |
| துயல்வர | கிடந்தசைய, |
| படுமணி | தாழ்கின்ற மணி |
| இரட்டும் | மாறியொலிக்கும் |
| மருங்கின் | பக்கத்தையும் |
| கடுநடை | கடியநடையினையும் |

| | |
|---|---|
| கூற்றத்து அன்ன | இயமனை யொத்த |
| மாற்றரும் | பிறராற்றடுத்தற்கரிய |
| மொய்ம்பின் | வலியினையுமுடைய, |
| கால் | காற்று |
| கிளர்ந்தன்ன | எழுந்தாற்போல (ஓடும்) |
| வேழமேல் | யானையின்மேல் |
| கொண்டு | ஏறி, |
| ஐ வேறு | ஐந்தாகி வேறுபட்ட |
| உருவின் | உருவத்தையுடைய |
| செய்வினை | (முடிக்குச்) செய்யுந் தொழில் வனைத்தும் |
| முற்றிய | முற்றுப்பெற்ற |
| முடியொடு | கிரீடத்தோடு |
| விளங்கிய | கூடிவிளங்கிய |
| முரண் மிகு | (ஒன்றற்கொன்று) மாறுபாடு மிகுந்த |
| திரு மணி | அழகையுடையமணிகள் |
| மின் உறழ் | மின்போன்ற |
| இமைப்பில் | பிரகாசத்தோடே |
| சென்னி | தலையில் |
| பொற்ப | பிரகாசிக்க, |
| நகை தாழ்பு | ஒளியானது தங்கி |
| துயல்வரூஉம் | அசையும் |

| | |
|---|---|
| வகை அமை ✓ | தொழிற்கூறமைந்த |
| பொலம் ✓ | பொன்னாற் செய்யப்பட்ட |
| குழை ✓ | மகரகுண்டலங்கள் |
| சேண் ✓ | ஆகாயத்திற் சென்று |
| விளங்கு ✓ | விளங்கா நின்ற |
| இயற்கை ✓ | இயல்பையுடைய |
| வாள் மதி | ஒளி பொருந்திய சந்திரன் |
| கவைஇ | சூழ்ந்து . |
| அகலா ✓ | நீங்காத |
| மீனின் ✓ | நட்சத்திரம்போல |
| அவிர்வன | பிரகாசிக்கின்றனவாகி ✓ |
| இமைப்ப ✓ | ஒளியைக்கக்க, |
| தாவு இல் ✓ | வருத்தமில்லாத |
| கொள்கை ✓ | விரதங்களையுடைய |
| தம் தொழில் ✓ | தங்கள் (தவத்தொழிலை) |
| முடிமார் ✓ | முடிப்பாருடைய |
| மனன் ✓ | மனத்தில் |
| ஏ நேர்பு ✓ | பொருந்தி |
| எழுதரு ✓ | தோன்றுகின்ற |
| வாள் ✓ | ஒளியி |
| நிறம் ✓ | நிறத்தையுடைய |
| முகனே ✓ | முகங்களிலே:— |
| 1 ஒருமுகம் ✓ | ஒருமுகமானது |

| | |
|---|---|
| மா இருள் | மிகுந்த இருளையுடைய |
| ஞாலம் | உலகம் |
| மறு இன்றி | குற்றமில்லாமல் |
| விளங்க | விளங்கும்படி |
| பல் கதிர் | பலகிரணங்களையும் |
| விரிந்தன்று | தோற்றுவிக்கின்றது, |
| II ஒரு முகம் | ஒருமுக மானது |
| ஆர்வலர் | (தன்மேல்) அன்புடையார் |
| ஏத்த | துதித்தற்கு |
| அமர்ந்து | பொருந்தி |
| இனிது ஒழுகி | அவர்க் கினிதாக நடந்து |
| காதலின் | (அவர்மேல்) அன்பினால் |
| உவந்து | மகிழ்ந்து |
| வரம் | வேண்டும்பொருள்களை |
| கொடுத்தன்று | முடித்துக்கொடுத்தது, |
| III ஒருமுகம் | ஒருமுக மானது |
| மந்திரம் | மந்திரத்தையுடைய |
| விதியின் | (வேதத்திற்சொல்லிய) விதியினது |
| மரபு உளி | முறைமையில் |
| வழாஅ | தப்பாத |
| அந்தணர் | பிராமணருடைய |
| வேள்வி | யாகங்களுக்கு |
| ஓர்க்கும்மே | தீங்கு வராதபடி நினைந்திருக்கும், |
| ஒரு முகம் IV | ஒருமுக மானது |

| | |
|---|---|
| எஞ்சிய | (இவ்வுலகத்தில்) வழங்காத |
| பொருள்களை | வேதப்பொருள்களை |
| ஏம் உற | (முனிவர்) மகிழ |
| நாடி | ஆராய்ந்தறிவித்து |
| திங்கள்போல | சந்திரனைப்போல |
| திசை | திக்குகளை |
| விளக்கும் | விளங்கும்படிச்செய்விக்கும், |
| ஒரு முகம் | ஒருமுக மானது |
| செல் | (மனதிற்) செல்கின்ற |
| சமம் | நடுவுநிலையை |
| முருக்கி | கெடுத்து |
| செறுநர் | பகைவராகிய அசுரரை |
| கறுவு கொள் | கோபங்கொண்ட |
| நெஞ்சமொடு | மனதுடனே |
| தேய்த்து | கொன்று |
| களம் | போர்க்களத்தை |
| வேட்டன்று | விரும்பினது, |
| ஒருமுகம் | ஒருமுகமானது |
| குறவர் | குறவருடைய |
| மடம் | அறியாமையையுடைய |
| மகள் | மகளாகிய |
| கொடிபோல் | கொடிபோன்ற |
| நுசுப்பின் | இடையினையுடைய |
| மடவரல் | இளமையாகிய |

| | |
|---|---|
| வள்ளியொடு | வள்ளியம்மையுடனே |
| நகை | மகிட்சியை |
| அமர்ந்தன்று | பொருந்திற்று, |
| அம்மூவிருமுகனும் | அந்த ஆறுமுகங்களும் |
| ஆங்கு | அத்தொழில்களிடத்து |
| முறை | செய்யுமுறைமைகளை |
| நவின்று | பயின்று |
| ஒழுகலின் | நடத்துகையால் (அம் முகங்கட்குப் பொருந்த) |
| ஆரம் தாழ்ந்த | பொன்னாரந் தங்கிய |
| அம்பகட்டு | அழகிய பெருமையையுடைய |
| மார்பில் | மார்பிற்கிடக்கின்ற |
| செம்பொறி | சிவந்த மூன்றுவரியினையும் |
| வாங்கிய | (தன்னிடத்து விழும்படி) வாங்கிக்கொண்ட |
| மொய்ம்பின் | தமது வலியால் |
| வண் புகழ் | பெரியகீர்த்தி |
| நிறைந்து | நிறையப்பட்டு |
| சுடர் விடுபு | ஆயுதங்களை எறிந்து |
| வசிந்து | (பகைவர்மார்பைப்) பிளந்து |
| வாங்கு | வாங்காநின்ற |
| நிமிர் | பெருகுதலையுடைய |
| தோள் | அத்தோள்களில் |

| | | |
|---|---|---|
| I | ஒருகை | ஒரு கையானது |
| | விண் | (எக்காலமும்) ஆகாயத்தில் |
| | செலல் | சஞ்சரிக்கின்ற |
| | மரபின் | முறைமையையுடைய |
| | ஐயர்க்கு | தெய்வ இருடிகளுக்கு |
| | ஏந்தியது | பாதுகாவலாக எடுத்தது, |
| II | ஒருகை | (அதற்கிணையாகிய) ஒருகை |
| | உக்கம் | மருங்கில் |
| | சேர்த்தியது | வைத்தது, |
| III | ஒருகை | ஒரு கையானது |
| | அங்குசம் | அங்குசத்தை |
| | கடாவ | செலுத்த |
| IV | ஒருகை | (அதற்கிணையாகிய) ஒருகை |
| | நலம்பெறு | (அழகு) பெற்ற |
| | கலிங்கத்து | ஆடையையுடைய |
| | குறங்கின்மிசை | தொடையின்மேல் |
| | அசைஇயது | கிடந்தது, |
| | இருகை | இரண்டுகைகள் |
| | ஐ | வியப்பையும் |
| | இரு | கருமையையுமுடைய |
| | வட்டமொடு | கேடகத்தோடு |
| | எஃகு | வேலையும் |
| | வலம்திரிப்ப | வலமாகச் சுழற்ற, |

| | |
|---|---|
| ஒருகை | ஒரு கையானது |
| மார்பொடு | மார்புடனே |
| விளங்க | (முனிவர்க்கு ஞானத்தைப் போதிக்குங் காலத்து) விளங்க |
| ஒருகை | ஒரு கையானது |
| தாரொடு | தாழ்ந்தமாலையோடு |
| பொலிய | சேர்ந்தழகுபெற, |
| ஒருகை | ஒருகையானது |
| தொடியொடு | தொடியுடனே |
| மீமிசை | மேலே |
| கொட்ப | சுழல |
| கீழ் வீழ் | கீழ்வீழ்ந்த |
| ஒருகை | மற்றக் கையானது |
| பாடு இன் | ஓசை யினிதாயொலிக்கின்ற |
| படு மணி | அசைகின்ற மணியை |
| இரட்ட | மாறி யொலிக்கப்பண்ண, |
| ஒருகை | ஒரு கையானது |
| நீல் நிற | நீலநிறத்தையுடைய |
| விசும்பின் | மேகத்தினால் |
| மலி | மிகுந்த |
| துளி | மழையை |
| பொழிய | பெய்யும்படி செய்விக்க |
| ஒருகை | (அதற்கிணையாகிய) ஒருகை |

| | |
|---|---|
| வான்அரமகளிர்க்கு | தெய்வப்பெண்களுக்கு |
| வதுவை | மணமாலையை |
| சூட்ட | தரிக்க, |
| ஆங்கு | அப்படியே |
| அட்பன்னிருகையும் | அப்பன்னிரண்டு கைகளும் |
| பாற்பட | முகத்தின் செயலிற் படும்படி |
| இயற்றி | (தொழில்) செய்து, |
| அந்தரம் பல்லியம் | தேவ துந்துபி (துந்துமி) |
| கறங்க | ஒலிக்க, |
| திண் | பலமான |
| காழ் | வயிரத்தையுடைய |
| வயிர் | கொம்பு |
| எழுந்து இசைப்ப | மிகுந் தொலிக்க, |
| உரம் | வலியை |
| தலைக்கொண்ட | தன்னிடத்தே கொண்ட |
| உரும் | இடியினது |
| இடி | இடித்தல் போன்ற |
| முரசமொடு | (ஓசையையுடைய)பேரிகையோடு |
| வால் வளை | வெள்ளிய சங்குகள் |
| நரல | முழங்க, |
| பல் பொறி | பல பீலியையுடைய |
| மஞ்ஞை | மயில் |
| வெல் கொடி | வெற்றிகொள்ளுங்கொடியிடத் தேயிருந்து |

அகவ — ஒலிக்க,
விசும்பு — ஆகாயமே
ஆறு'க — வழியாக
விரை — விரைவான
செலல் — செல்லுதலை
முன்னி — மேற்கொண்டு
ஓங்கு — நன்மையோங்கிய
உலகம் புகழ்ந்த — உயர்மக்கள் புகழ்ந்த
உயர் — உயர்வாகிய
விழு — சிறப்புப்பொருந்திய
சீர் — புகழையுடைய
அலைவாய் — திருச்செந்தூரில்
சேறலும் — எழுந்தருளியிருத்தலும்
நிலைஇய — அவருக்கு நிலைபெற்ற
பண்பு — குணம்.
அதாஅன்று — அதுவன்றி,—

'வேழமேற்கொண்டு' 'திருமணி சென்னிப்பொறப்ப' 'குழையிமைப்ப' 'வாணிரமுகங்களில்' 'ஒருமுகம் பல்கதிர் விரிந்தன்று, ஒருமுகம் வரங்கொடுத்தன்று, ஒருமுகம் வேள்வி ஓர்க்கும், ஒருமுகம் திசைவிளக்கும், ஒருமுகம் களம்வேட்டன்று, ஒருமுகம் நகையமர்ந்தன்று.' ; 'மூவிருமுகனும் ஆங்குமுறைநவின் றொழுகலின்' 'நிமிர் தோள்களில்' 'ஒருகை ஐயர்க்கேந்தியது, ஒருகை உக்கம்

சேர்த்தியது, ஒரு கை அங்குசங்கடாவ, ஒரு கை குரங் கின் மிசையசையது, இரு கை எஃகு வலந்திரிப்ப, ஒரு கை மார்பொடு விளங்க, ஒரு கை நூலொடுபொலிய, ஒ ரு கை தொடியொடு கொட்ப, ஒரு கை மணியிரட்ட, ஒரு கை துளிபொழிய, ஒரு கை வதுவைசூட்ட, ஆங்கு அப் பன்னிருகையும் பாற்பட இயற்றி, பல்லியங் கற ங்க, வயிர் இசைப்ப, வளைநரல, கொடியகவ, செலல் முன்னி,'; திருச்செந்தூரில் எருந்தருளி யிருத்தலும், அவருக்கு நிலை பெற்ற குணமே: அன்றியும்,—

மூன்றாவது

## திருவாவினன்குடி.

---

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு

கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்;

புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர,
நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்;

கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக்கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும், வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு,

நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு,
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக;
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரோ
டொன்ப திரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
ருறுகுறை மருங்கிற் றம்பெறு முறைகொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்,
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்று,

இதன்பொருள்.

('சீரை' முதல் 'உரியன்' வரையில் ஒருதொடர்.)

| பதம். | உரை. |
|---|---|
| சீரை தைஇய | மரவுரியையுடையாகச்செய்த |
| உடுக்கையர் | உடையினையுடையவரும், |
| சீரொடு | அழகுடன் (வடிவாலும் நிறத்தாலும்) |
| வலம்புரி புரையும் | வலம்புரிச்சங்கை ஒத்த |
| வால் | வெளுத்த |
| நரை முடியினர் | நரைமுடியையுடையவரும், |
| மாசற | (நீரிற்குளித்தலால்) அழுக்கற |
| இமைக்கும் | விளங்குகின்ற |
| உருவினர் | உருவத்தையுடையவரும், |
| மானின் | மானினது |
| உரிவை | தோலை |
| தைஇய | போர்த்துக்கொண்ட |
| ஊன்கெடு | (விரதங்களால்) தசை கெடுகின்ற |
| மார்பின் | மார்பினது |
| என்பு எழுந்து | எலும்புகள் தோன்றி |
| இயங்கும் | விளங்குகின்ற |
| யாக்கையர் | உடம்பினையுடையவரும், |

௩-அ **திருமுருகாற்றுப்படை**

| | |
|---|---|
| நன் பகல் | (எப்பொருளையு முணர்தற்கு) நன்றாகிய பகற்பொழுதுகள்- |
| பலவுடன் கழிந்த | பலவுஞ் சேரக்கழிந்த |
| உண்டியர் | உணவையுடையவரும், |
| இகலொடு | மாறுபாட்டுடனே |
| செற்றம் நீக்கிய | பகையை நீக்கிய |
| மனத்தினர் | மனத்தையுடையவரும், |
| யாவதும் | பலவற்றையும் |
| கற்றோர் | கற்றோர்கள் |
| அறியா | (சிறிதும்) அறியாத |
| அறிவினர் | அறிவினையுடையவரும், |
| கற்றோர்க்கு | பலவற்றையுங்கற்றோர்க்கு |
| தாம் வரம்பாகிய | தா மெல்லையாகிய |
| தலைமையர் | தலைமையையுடையவரும், |
| காமமொடு | ஆசையுடனே |
| கடுஞ் சினம் | கொடியகோபத்தை |
| கடிந்த | போக்கின |
| காட்சியர் | அறிவையுடையவரும், |
| இடும்பையாவதும் | (மனவருத்தஞ் சிறிதும் |
| அறியா | அறியாத |
| இயல்பினர் | தன்மையையுடையவருமாகிய, |
| துனியில் | வெறுப்பில்லாத |
| காட்சி | நல்லறிவினையுடைய |

| | |
|---|---|
| முனிவர் | முனிவர்கள் |
| மேவர | (திருவுளம்) பொருந்துதல்வரும்படி |
| முற்புக | முன்னே செல்லவும்; |
| புகை | புகையை |
| முகந்து அன்ன | முகந்தாலொத்த |
| மாசில் | (தெய்வத்தன்மையால்) அழுக்கேறாத |
| தூ உடை | பரிசுத்தமாகிய ஆடையையும், |
| முகை | மொக்கு |
| வாய் அவிழ்ந்த | மலர்ந்த |
| தகை | மாலை |
| சூழ் | சூழ்ந்த |
| ஆகத்து | மார்பினையுமுடைய, |
| செவி | எம்முடைய காதால் |
| நேர்பு | (சுருதியை) அளந்து |
| வைத்த | நரம்பைக் கட்டின |
| செய்வு உறு | சுற்றுதலுறும் |
| திவவின் | வார்க்கட்டினையுடைய |
| நல்யாழ் | நன்றாகிய வீணையினிசையில் |
| நவின்ற | பழகின |
| நயனுடை | நன்மையையுடைய |
| நெஞ்சின் | மனத்தால் |

4673a

| | |
|---|---|
| மெல் மொழி | மெல்லியவார்த்தை சொல்லுதலை |
| மேவலர் | பொருந்தியகற்றுவர், |
| நோயின்று | நோய்களில்லாமல் |
| இயன்ற | உண்டுபண்ணப்பட்ட |
| யாக்கையர் | உடம்பினை யுடையவரும், |
| மாவின் | மாவினது |
| அவிர் | விளங்குகின்ற |
| தளிர் புரையும் | தளிர் போன்ற |
| மேனியர் | நிறத்தையுடையவரும், |
| அவிர் தொறும் | விளங்குந்தோறும் |
| பொன்னுரை | பொன்னுரை |
| கடுக்கும் | விளங்கினாற்போலும் |
| திதலையர் | தேமலையுடையவருமாகிய, |
| இன்னகை | இனிய ஒளியையுடைய |
| பருமம் | (பதினொன்கு கோவையாகிய) மேகலையை |
| தாங்கிய | அணிந்த |
| பணிந்து | (தாழவேண்டியவிடத்துத்)தாழ்ந்து |
| ஏந்து | (உயரவேண்டியவிடத்)துயர்ந்த |
| அல்குல் | அல்குலினையுடைய |
| மாசு இல் | குற்றமில்லாத |

| | |
|---|---|
| மகளிரொடு | கந்தருவமகளிரோடு, |
| மறுவின்றி | குற்றமில்லாமல் |
| விளங்க | விளங்கும்படி |
| இன் நரம்பு | இனியநரம்பை |
| உளர | வாசிக்கவும்; |
| கடுவோடு | நஞ்சுடனே |
| ஒடுங்கிய | உறைக்குள்ளேகிடந்த |
| தூம்பு உடை | துளையையுடைய |
| வால் | வெளுத்த |
| எயிற்று | பல்லினையும் |
| அழலென | நெருப்பென்னும்படி |
| உயிர்க்கும் | பெருமூச்சுவிடும் |
| அஞ்சு வரு | (கண்டார்க்) கச்சந்தோன்றும் |
| கடுந்திறல் | கொடிய வலியினையுமுடைய, |
| பாம்பு | பாம்பு |
| பட்புடைக்கும் | சாக அடிக்கும் |
| பல்வரி | பலவரியினையுடைய |
| கொடுஞ் சிறை | வளைந்த சிறகையுடைய |
| புள்ளணி | கருடனையணிந்த |
| நீள் கொடி | நீண்டகொடியையும், |
| நாற் பெரும் | நாலாகிய பெரிய |

| | |
|---|---|
| தெய்வத்து | (இந்திரன் யமன் வருணன் குபேரன்) ஆகிய தேவர்களுடைய |
| நன்னகர் | நன்றாகிய நகரங்களினுல |
| நிலைஇய | நிலைபெற்ற |
| உலகம் காக்கும் | உலகத்தைரட்சிக்கும் |
| ஒன்றுபுரி | ஒருதொழிலையே விரும்பிய |
| கொள்கை | தன்மையையுமுடைய, |
| செல்வனும் | திருமாலும்; |
| வலவயின் | வெற்றிக்களத்தே |
| வெள் ஏறு | வெளுத்த எருதை |
| உயரிய | கொடியாக எடுத்த |
| உமை அமர்ந்து | உமாதேவியொரு பாகத்தில் பொருந்தி |
| விளங்கும் | விளங்குகின்றம் |
| பலர் புகழ் | பலரும் புகழ்கின்ற |
| திணி தோள் | வலிமையாகிய தோளையும் |
| இமையா | இமைக்காத |
| முக்கண் | மூன்றுகண்களையுமுடைய |
| மூவெயில் | முப்புரத்தையும் |
| முருக்கிய | எரித்த |
| முரண்மிகு | வலிமைமிகுந்த |

| | |
|---|---|
| செல்வனும் | உருத்திரனும்; |
| நூற்றுப்பத்து | ஆயிரம் |
| அடுக்கியநாட்டத்து | அடுக்கிய கண்களையும், |
| நூறு | நூறாகிய |
| பல்வேள்வி | பலவேள்விகளை |
| முற்றிய | முடித்ததனாற்பெற்ற |
| வென்றடு | (பகைவரை) வென்று கொல்கின்ற |
| கொற்றத்து | வெற்றியையு முடைய, |
| ஏந்திய | தலைகள் (ஏந்தியிருக்கின்ற) |
| ஈரிரண்டு | நான்காகிய |
| மருப்பு | கொம்பினையும் |
| எழில் | அழகாகிய |
| நடை | நடையினையும் |
| தாழ் | தாழ்ந்து(நிலத்திற்)கிடக்கின்ற |
| பெரும் | பெரிய |
| தடம் | அவளவினையுடைய |
| கை | கையினையுமுடைத்தாகிய |
| உயர்த்த | (யாவரும்) உயர்த்துச் சொல்கின்ற |
| யானை | வெள்ளையானையினது |
| எருத்தம் | கழுத்தில் |

# திருமுருகாற்றுப்படை

| | |
|---|---|
| ஏறிய | ஏறிய |
| திருக்கிளர் | அழகு விளங்குகின்ற |
| செல்வனும் | இந்திரனும்; |
| பலர் புகழ் | பலரும் புகழ்கின்ற |
| மூவரும் | (அயன் அரி அரனென்னும்) மூவரும் |
| தலைவராக | தத்தமக்குரிய தொழில்களை (முன்போற்செய்து) தலைவராக வேண்டி, |
| ஞாலந்தன்னில் | (முருகக்கடவுள் சபித்தலால்) மண்ணிடத்தே |
| தோன்றி | வந்து |
| ஏமுறும் | மயக்கமுற்ற |
| தாமரை | (திருமாலுந்தித்)தாமரை |
| பயந்த | பெற்ற |
| ஊழி | ஊழிக்காலத்தில் |
| தாவு இல் | கெடுதலில்லாத |
| நான்முக | நான்கு முகத்தையுடைய |
| ஒருவன் | பிரமதேவனை |
| சுட்டி | (பழையநிலையிலே நிறுத்த) லைத்து, |
| காண்வர | அழகுதோன்ற |

| | |
|---|---|
| பகலில் | (காணப்படும்) பகலிடத்து |
| தோன்றும் | (வேறுபடத்) தோன்றும் |
| இகல் இல் | தம்மிடத்து மாறுபாடில்லாத |
| காட்சி | அறிவையுடைய |
| நால்வேறு | (ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்து, என்னும்) நாலாகிய வேறுபாட்டின் |
| இயற்கை | இயல்பையுடைய |
| பதினொருமூவரோடு | முப்பத்துமூவரும் |
| ஒன்பதிற்றிரட்டி | (தேவர் சித்தர் அசுரர் தைத்தியர் கருடர் கின்னரர் நிருதர் கிம்புருடர் கந்தருவர் இயக்கர் விஞ்சையர் பூதர் பைசாசர் அந்தரர் முனிவர் உரகர் ஆகாசவாசிகள் போகபூமியர்) என பதினெண் வகையாகிய |
| உயர் நிலை | உயர்ந்த நிலையை |
| பெறீஇயர் | பெற்ற (கணங்களும்), |
| மீன் | நட்சத்திரங்கள் |
| பூத்த அன்ன | (அழகாய்த்) தோன்றினாற் போல |
| தோன்றலர் | தோற்றத்தையுடையவராயும், |

| | |
|---|---|
| மீன் | மீன்கள் (சஞ்சரிக்கின்றகடலி டத்தே) |
| சேர்பு | சேர்ந்து |
| வளி | காற்று |
| கிளர்ந்து அன்ன | எழுந்தாற்போல |
| செலவினர் | நடையையுடையவர்ராயும்; |
| வளியிடை | காற்றிடத்தே |
| தீயெழுந்து அன்ன | நெருப்பு எழுந்தாற்போன்ற |
| திறலினர் | வலியையுடையவராயும், |
| தீப்பட | நெருப்புண்டாக |
| உரும் | இடி |
| இடித்து அன்ன | இடித்தல் போன்ற |
| குரலினர் | குரலையுடையவராயும், |
| தம் | தம்முடைய |
| விழுமிய | சிறப்பான (படைத்தல் காத்த லழித்தலென்னும்) தொழில் களை |
| பெறும் | முன்போலப் பெறுகின்ற |
| முறை | முறையை |
| குறையுறும் | குறைவேண்டிகின்று |
| மருங்கின் | பெருங்கூற்றால் |
| கொண்மார் | முடித்துக்கோடற்கு |
| அந்தரம் | ஆகாயத்தே |

| | |
|---|---|
| கொட்பினர் | திரிதலையுடையவராய் |
| உடன் வந்து | ஒருங்கே வந்து |
| காண | காணும்படியாக |
| தாவில் | கெடுதலில்லாத |
| கொள்கை | கற்பையுடைய |
| மடந்தையொடு | தெய்வயானையாருடன் |
| ஆவினன்குடி | திருவாவினன் குடியின் கண்ணே |
| சின்னாள் | சிலநாள் |
| அசைதலும் | இருத்தலும் |
| உரியன் | உரியர். |
| அதா அன்று | அதுவன்றி,— |

முருகக் கடவுள் தெய்வானையம்மையாரைத் திருமணஞ் செய்தபோது தமது திருக்கரத்திலிருந்த வேலை நோக்கி நமக்கு இவை யாவுந் தந்தது இவ்வேல் என்று திருவாய் மலர்ந்தருள, அருகி லிருந்த பிரமதேவர் இவ்வேலுக்கு இந்நிலை என்னால் வந்ததென்ன, முருகக்கடவுள் கோபித்து நீ பூமியிற் போவாயென்று சபித்தனர். அவ்வாறே பிரமதேவர் படைத்தொழிலை விட்டு பூமியிற்செல்ல, மற்றிருவருக்கும் காத்தற்றொழிலும் அழித்தற்றொழிலும் இலவாயின. அதனால், 'முனிவர் முற்புக' மென்மொழிமேவலர், மாசில் மகளிரொடு, இன்னரம்பு

ளர, உலகங்காக்குஞ் செல்வனும், முக்கண் செல்வனும், யானையெருத்தமேறிய செல்வனும், ஆகிய மூவரும் தத் தமக்குரிய தொழில்களைச்செய்து 'தலைவராக' வேண்டி 'நான்முக ஒருவற்சுட்டி பதினொரு மூவரோ டொன்பதி ரட்டி,யுயர்நிலை பெறீஇயர்,உடன்வந்துகாண, ஆவினன் குடியசைதலு முரியன்: அதுவன்றி,—

நான்காவது

## தி ரு வே ர க ம்.

---

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
யறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்தமுத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
வொன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம்புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று.

---

## இதன்பொருள்.

('இருமூன்று' முதல் 'உரியன்' வரையில், ஒருதொடர்.)

| பதம். | உரை. |
|---|---|
| இருமூன்று | அறு தொழிலாகிய |
| எய்திய | (நன்மை)பொருந்திய |
| இயல்பினின் | இலக்கணத்தினின்றும் |
| வழாஅது | தப்பாமல், |
| இருவர் | (தாயுந் தந்தையு மாகிய) இருவர் குலத்தையும் |
| சுட்டிய | (உலகத்தார் நன்றென்று) மதித்த |
| பல்வேறு | பலவாகிய வேறுபட்ட |
| தொல் குடி | பழையகுடியிற் (பிறந்த) |
| அறுநான்கிரட்டி | நாற்பத்தெட்டு |
| யாண்டு | வருடத்தும் |
| நல் விளமை | நல்ல இளமையை |
| ஆற்றினில் | (வேதங்கூறிய பிரமசரிய)மார்க்கத்தில் |
| கழிப்பிய | போக்கிய |
| அறன் நவில் | தருமத்தைச்சொல்லும் |
| கொள்கை | தன்மையையும் |
| மூன்று வகை | (சதுரம் முக்கோணம் வில்வளைவு (ஆகிய மூன்றுவகையாக) |

| | |
|---|---|
| குறித்த | குறிக்கப்பட்ட |
| முத்தீ | (ஆகவநீயம் தக்ஷிணாக்கினி காருகபத்தியம் என்னும்) மூன்று தீயாலுண்டாகிய |
| செல்வத்து | செல்வத்தையும் |
| ஒன்பதுகொண்ட | ஒன்பது இழை கொண்ட |
| மூன்றுபுரி | மூன்றாக முறுக்கப்பட்ட |
| நுண்ஞாண் | நுட்பமாகிய உபவீதத்தையுடைய |
| இருபிறப்பாளர் | பிராமணர்கள்; |
| பொழுது | (தாங்கள் வழிபடும்) காலம் |
| அறிந்து | அறிந்து, |
| புலரா | (குளித்துத் தோய்த்ததனால்) ஈரம்நீங்காத |
| காழகம் | வஸ்திரம் |
| புலர | (தேகத்திற் கிடந்து) காய |
| உடீஇ | தரித்துக்கொண்டு, |
| அருமறை | அருமையாகிய வேதத்திற் சொல்லப்பட்ட |
| ஆறெழுத்து | ஆறெழுத்தை |
| அடக்கிய | தன்னிடத்தடக்கிய |
| கேள்வி | *மந்திரத்தை |

* இது குருமுகமா யறியத்தக்கது.

| | |
|---|---|
| நா | நாவானது |
| இயல் | புடை பெயரும் |
| மருங்கின் | அளவிலே |
| நவில் பாடி | பயில உச்சரித்து, |
| விரை உறு | வாசனை மிகுந்த |
| நறுமலர் | நல்ல பூவை |
| ஏந்தி | எடுத்து அருச்சித்து |
| உச்சி | தலையின்மேலே |
| கூப்பிய | குவித்த |
| கையினர் | கையையுடையவராய், |
| தற்புகழ்ந்து | தம்மைப்புகழ்ந்து |
| நுவல | தோத்திரங்களைச்சொல்ல; |
| பெரிது | மிகவும் |
| உவந்து | மகிழ்ந்து |
| ஏரகத்து | திருவேரகத்தின் கண்ணே |
| உறைதலும் | எழுந்தருளியிருத்தலும் |
| உரியன் | உரிமையையுடையார். |
| அதாஅன்று | அதுவன்றி,— |

'இருபிறப்பாளர்' 'அறிந்து, உடீஇ, பாடி, ஏந்தி தற்புகழ்ந்து, நுவல, ஏரகத் துறைதலு, முரியன்., அதுவன்றியும்,—

## ஐந்தாவது
## குன்றுதோராடல்.

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேல
னம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணிய,
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர,
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
யிணைத்த கோதை யணைத்த கூந்தன்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்கு றிளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு,
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்

நகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு,
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று

இதன்பொருள்.

('பைங்கொடி' முதல் 'பண்பே' வரையில், ஒருதொடர்.)

| பதம். | உரை. |
|---|---|
| நறும் | வாசனையாகிய |
| சாந்து | சந்தனத்தை |
| அணிந்த | பூசிப் புலர்ந்த |
| கேழ் | நிறம் |
| கிளர் | விளங்கும் |
| மார்பின் வேலன் | மார்பையுடைய வேலனை |
| கொடும் | கொடிய |
| தொழில் | தொழிலினையுடைய |
| வல் | வலிய |
| வில் | வில்லினால் எய் |
| கொலைஇய | கொல்லுதலைச்செய்த |
| கானவர் | வேடர்கள், அவர் |

# ௫௪ திருமுருகாற்றுப்படை.

| | | |
|---|---|---|
| III | நீடு / அமை | நீண்ட / மூங்கிலிலே |
| | விளைந்த | இருந்து முற்றின |
| | தே | தேனாற்செய்த |
| | கள் தேறல் | கள்ளினது தெளிவை |
| | குன்றகம் | மலையிடத்து |
| | சிறு குடி | சிற்றூரிலிருக்கின்ற |
| | கிளையுடன் | சுற்றத்தோடு |
| | மகிழ்ந்து | (உண்டு) மகிழ்ந்து, |
| IV | விரல் 4 | விரலினது தலையால் |
| | உளர்ப்பு 5 | மலரச்செய்விக்க |
| | அவிழ்ந்த 6 | மலர்ந்த பூவாதலால் |
| | வேறுபடு 7 | வேறுபடுகின்ற |
| | நறும் கால் 8 | மணம் பொருந்திய தாளினை யுடைய |
| IV | குண்டு 10 | ஆழ்ந்த |
| | சுனை பூத்த 11 | சுனையிற் பூத்த |
| | வண்டு படு 12 | வண்டு வீழ்கின்ற |
| | கண்ணி 9 | அரும்புகளினாலே |
| | இணைத்த 13 | தொகுக்கப்பட்ட |
| | கோதை 14 | மாலையினை |
| | அணைத்த 15 | சேர்த்தின |
| | கூந்தல் 16 | கூந்தலினையும் |

| | |
|---|---|
| முடித்த | இலையைத்தலையிலுடைய |
| குல்லை | கஞ்சங்குல்லையினையும்(கஞ்சா) |
| இலையுடை | இலையையுடைத்தாகிய |
| நறும் பூ | நறிய பூங் கொத்துகளையும் |
| செங்கால் | சிவந்த காலையுடைய |
| மராஅத்த | கடம்பினிடத்தவாகிய |
| வால் இணர் | வெளுத்த பூங்கொத்துகளை |
| இடை யிடுபு | நடுவே வைத்து |
| சுரும்பு உண | வண்டுகள்(தேனை)யுண்ணும்படி |
| தொடுத்த | கட்டின |
| பெரும் தண் | மிகுதியுங்குளிர்ந்த |
| மா | அழகையுடைய |
| தழை | தழைவடங்கள் |
| திருந்து | திருந்திய |
| அல்குல் | அல்குலினிடத்தே |
| திளைப்ப | அசையும்படி |
| காழ் | மேகலையை |
| உடீஇ | உடுத்து, |
| மயில் | மயிலை |
| கண்டு அன்ன | கண்டாற்போல |
| மடம் | அறியாமையாகிய |
| நடை | ஒழுக்கத்தையுமுடைய |
| மகளிரொடு | பெண்களுடனே |

ஸ்ரீ திருமுருகாற்றுப்படை.

| | |
|---|---|
| தொண்டகம் 1 ✓ | (குறிஞ்சிநிலத்துக்குரிய) தொண்டகமென்னும் |
| சிறு பறை 2 ✓ | சிறிய பறையினது தாளத்திற் |
| குரவை அயர 3 ✓ | குரவைக்கூத்தாட; (கிசைய |
| வேலன் 53rd Page | வேலன் ✓ |
| பைங்கொடி 1 | பச்சிலைக்கொடியினலே |
| அம் 5 ✓ | அழகாகிய |
| பொதி 6 ✓ | பொதிதலையுடைய |
| புட்டில் 7 ✓ | தக்கோலக்காய்களை ✓ |
| விரைஇ 8 ✓ | கலந்து |
| நறைக்காய் 3 | வாசனையாகிய / சாதிக்காயை |
| இடையிடுபு 4 ✓ | நடுவேயிட்டு |
| குளவியொடு 9 ✓ | காட்டுமல்லிகையுடனே |
| வெண் 10 ✓ | வெண்மையாகிய |
| கூதாளம் தொடுத்த 12 | கூதாளியையுங் கட்டிய |
| கண்ணியன் 13 | மாலையைச்சூடி, |
| செய்யன் ✓ | சிவந்த நிறத்தையுடையராய், |
| சிவந்த ஆடையன் | சிவந்த வஸ்திரத்தை யுடுத்து, |
| செவ்வரை ✓ | செவ்விய அரையையுடைய |
| செயலை ✓ | அசோகினது |
| தண் ✓ | குளிர்ச்சியாகிய |

# பதவுரை.

| | |
|---|---|
| தளிர் இயல்வரும் | தளிர் அசையும் |
| காதினன் | காது பொருந்தி, |
| கச்சினன் | கச்சைகட்டி, |
| கழலினன் | கழலையணிந்து, |
| செச்சை | வெட்சி |
| கண்ணியன் | மாலையைச்சூடி, |
| குழலன் | குழலினையூதி, |
| கோட்டன் | கொம்பைக்குறித்து, |
| குறும் | சிறிய |
| பல்லியத்தன் | வாத்தியங்களை யெழுப்பி, |
| தகரன் | ஆட்டுக்கடாவைப்பின்னிட்டு, |
| மஞ்ஞையன் | மயிலின்மேலேறி, |
| புகரில் | குற்றமில்லாத |
| அம் | அழகிய |
| சேவல் கொடியன் | கோழிக் கொடியை யுயர்த்து, |
| நெடியன் | நீண்டு வளர்ந்து, |
| தொடிஅணி தோளன் | தோளிற் கைவளை யணிந்து |
| மருங்கில் | இடையில் |
| கட்டிய | இறுகக் கட்டிய |
| குறும்பொறி | உதரபந்தனத்தின்மேலே |
| கொண்ட | உடுப்பதாகக்கொண்ட |

௫அ திருமுருகாற்றுப்படை.

| | | |
|---|---|---|
| IX | நிலன் | நிலத்தில் |
| | நேர்பு | பொருந்திய |
| | நறும் | நறிய |
| | தண் | குளிர்ந்த |
| | சாயல் | மென்மையாகிய |
| | துகிலினன் | வஸ்திரத்தையுடுத்து, |
| VII | நரம்பு | (யாழ்) நரம்பு |
| | ஆர்த்து அன்ன | சத்தித்தாற்போலொத்த (யுடைய) |
| | இன் குரல் | இனிய மிடற்றோசையை |
| | தொகுதியொடு | மகளிர் கூட்டத்துடனே |
| X | தலைத்தந்து 10 | திரிந்து; |
| | மென் தோள் | மெல்லிய தோளையுடைய |
| | பல் பிணை | பெண்மான்போன்ற பல பெண்களை |
| | முழவு உறழ் | முழவையொத்த |
| | தடக் கையின் | (தம்முடைய) பெரிய கையால் |
| | தழீஇ | அவர்கள் (கையைத்) தழுவி |
| | இயல | பொருந்தும்படி |
| | ஏந்தி | எடுத்துக்கொண்டு, |
| | குன்றுதோறாடலும் | மலைகள்தோறுஞ் சென்றுவிளையாடலும் |
| | தன் | தமக்கு |
| | நின்ற | நிலைநின்ற |

பண்பே குணமாம்.
அதாஅன்று அதுவன்றி,—

'கானவர் மகிழ்ந்து, மகளிரொடு, குரவையயர; வேலன், கண்ணியன், செய்யன், ஆடையன், காதினன், கசினன், கழலினன், கண்ணியன், குழலன், கோட்டன், குறும் பல்லியத்தன், தகரன், மஞ்ஞையன்,சொடியன், நெடியன், தோளன், துகிலினன், தொகுதியொடு, தலைத்தந்து, பல்பிணை தழீஇ ஏந்தி, குன்றுதோறாடலும், தன் பண்பே! அதுவன்றி.—

## ஆறாவது
## பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
யூரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியு
மாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு

மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுடை யுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
யிமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக்
ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலு மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
(வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ

குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க் கார்த்து மிசைபே ராள
வலர்ந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குருசிலு மெனப்பல
யானறி யளவையி னேத்தியா னாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தன னின்னொடு
புரைநா ரில்லாப் புலமையோ யெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
யளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென

வினியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரை பரிதியிற் றொடுத்த
தண்கமழ் மலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

இதன்பொருள்

('சிறுதினை' முதல் 'நிலையினும்' வரையில், ஒருதொடர்.

| பதம். | | உரை. |
|---|---|---|
| சிறுதினை | ✓ | சிறிதினையரிசியை |
| மலரொடு | ✓ | பூக்களோடு |
| விரைஇ | ✓ | கலந்துவைத்து |
| மறி அறுத்து | ✓ | ஆட்டையறுத்து, |
| வாரணம் | ✓ | கோழிமேலாகிய |

| | |
|---|---|
| கொடியொடு | கொடியுடனே |
| வயிற்பட | தாழ்வ்விடத்தே நிற்கும்படி |
| நிறீஇ | நிறுத்தி, |
| ஊர் ஊர் | ஊர்தோறும் உளூர்தோறும் |
| கொண்ட | எடுத்துக்கொண்ட |
| சீர் கெழு | தலைமை பொருந்திய |
| விழவினும் | திருவிழாவினும், |
| ஆர்வலர் | தம்மேலன்புடையார் |
| ஏத்த | துதித்தலால் |
| மேவரு | (தமது திருவுள்ளம்) விரும்பிய |
| நிலையினும் | இடத்தினும், |
| வேலன் | தேவராளன் |
| தைஇய | செய்த |
| வெறி அயர் களனும் | வெறியாடு களத்தினும், |
| காடும் | காட்டினும், |
| காவும் | பொழிலினும், |
| கவின் பெறு | அழகு பெற்ற |
| துருத்தியும் | ஆற்றிடைக்குறையினும், |
| யாறும் | ஆறுகளினும், |
| குளனும் | குளங்களினும், |
| வேறு | வேறுபட்ட |
| பல் வைப்பும் | பலவாகிய வூர்களினும், |

| | |
|---|---|
| சதுக்கமும் | நாற்சந்தியினும், [ம், |
| சந்தியும் | முச்சந்தியினும் ஐஞ்சந்தியினு |
| புதுப் பூம் | புதிய பூக்களையுடைய |
| கடம்பும் | கடம்பினும், |
| மன்றமும் | ஊர்நடுவே யெல்லோருமிருக்கு மரத்தடியினும், |
| பொதியினும் | அம்பலத்தினும், |
| கந்து உடை | பசுக்கட்டுத் தறியையுடைய [யர். |
| நிலையினும் | இடத்தினும், |

(உறைதலுமுரியன்) எழுந்தருளியிருத்தலும்உரி

'மாண்' முதல் 'உறைதலும்' வரையில் ஒருதொடர்.

| | |
|---|---|
| மாண் | மாட்சிமைப்பட்ட |
| தலை | தலைமையுடைய |
| கொடியொடும் | கோழிக்கொடியுடனே |
| அமைவர | பொருந்த |
| மண்ணி | அலங்கரித்து, |
| நெய்யொடு | நெய்யுடனே |
| ஐயவி | வெண்சிறுகடுகையும் |
| அப்பி | (நெற்றியிலே) அப்பி |
| ஐது உரைத்து | (மந்திரத்தை)தோன்றாமலுச் |
| குடந்தம் பட்டு | வழிபட்டு [சரித்து |
| கொழுமலர் சிதறி | அழகியமலர்களைத் தூவி |
| முரண் கொள் | தன்னில் மாறுபாடு கொண்ட |

| | |
|---|---|
| உருவின் | உருவத்தையுடைய |
| இரண்டு உடை | இரண்டு வஸ்திரத்தை [யை] |
| உடீஇ | (உள்ளொன்றும் புறம்பொன்றுமாக) வுடுத்து, |
| செந் நூல் | சிவந்த நூலை |
| யாத்து | கையிற் காப்புக்கட்டி, |
| வெண்பொரிசிதறி | வெளுத்தபொரியைத் தூவி, |
| மதம் வலி | மிருகியாகிய வலிமை |
| நிலைஇய | நிலைபெற்ற [யையுமாகிய] |
| மா தாள் | பெரிய காலையுடைய |
| கொழு | கொழுவிய |
| விடை | கடாவினது |
| குருதியொடு | இரத்தத்தோடு |
| விரைஇ | பிசைந்த |
| தூ வெள்ளரிசி | பரிசுத்தமாகிய வெள்ளரிசியை |
| சில்பலி செய்து | சிறுபலியாக இட்டும் |
| பல் பிரப்பு | பலவித கலங்களை [கூட்டும்] |
| இரீஇ | வைத்து |
| சிறு | பிரசங்க |
| பசு மஞ்சளொடு | பசுமையாகிய மஞ்சளுடனே |
| நறு | வாசனையாகிய |
| விரை | சந்தனமுதலியவற்றை |

# திருமுருகாற்றுப்படை.

| | |
|---|---|
| தெளித்து | தெளித்து, |
| பெரும் | பெரிய |
| தண் | குளிர்ந்த |
| கண்வீரம் மாலை | செவ்வலரி மாலையையும் |
| நறும் | வாசனையாகிய |
| தண் மாலை | குளிர்ந்த (பிற) மாலையையும் |
| துணையுற அறுத்து | இணையொக்க அறுத்து |
| தூங்க நாற்றி | அசையத் தொங்கவிட்டு |
| நளி மலை | நெருங்கிய மலையினது |
| சிலம்பின் | பக்கத்திலுள்ள |
| நல் நகர் | நல்ல நகரங்களை |
| வாழ்த்தி | (பசியும் பிணியும் பகையும் நீங்குக வென்று வாழ்த்தி,) |
| நறும் புகை | வாசனையாகிய தூபம் |
| எடுத்து | கொடுத்து |
| குறிஞ்சி பாடி | குறிஞ்சிப்பண்களைப் பாடி |
| இமிழ் | முழங்குகின்ற |
| இசை | ஓசையையுடைய |
| அருவியோடு | அருவியாற்றுடனே |
| இன் இயம் | இனிய வாத்தியங்களும் |
| கறங்க | ஒலியாநிற்க, |
| உருவம் | (சிவந்த) நிறத்தினையுடைய |

| | |
|---|---|
| பல்பூ தூஉய் | பல பூக்களைத் தூவி, |
| வெருவர | அச்சந்தோன்ற |
| குருதி | இரத்தங்கலந்த |
| செந் தினை பரப்பி | சிவந்த தினையைப் பரப்பி |
| குறமகள் | குறப்பெண்ணானவள் |
| முருகியம் | தொண்டகப்பறையை |
| நிறுத்து | வாசிக்கப்பண்ணி, |
| முரணினர் | தெய்வமின்றென்பார் |
| உட்க | அஞ்சும்படியாக |
| முருகு | முருகக்கடவுள்வரும்பொருட் |
| ஆற்றுப் படுத்த | வழிப்படுத்திய |
| உருகெழு | அச்சம் பொருந்திய |
| வியன் நகர் | விசாலமாகிய நகரினிடத்து |
| ஆடுகளம் | வெறியாடுகின்ற களம் |
| சிலம்ப | ஆரவாரிக்க |
| பாடி | (அதற்கேற்பனவற்றைப்) பாடி |
| கோடு பலவுடன் | கொம்புகள் பலவற்றையும் |
| வாய் வைத்து | சேர ஊதி, |
| கொடுமணி இயக்கி | கொடியமணியை ஒலிப்பித்து, |
| ஓடாப் பூட்கை | (வலிமை) கெடாத யானையையும் |
| பிணிமுகம் வாழ்த்தி | மயிலையும் வாழ்த்தி, |

| | |
|---|---|
| வேண்டுநர் | தம்மை விரும்புவோர் [யே |
| வேண்டியாங்கு | வரங்களைத் தாம் விரும்பியபடி |
| எய்தினர் வழிபட | பெற்றுநின் றுவழிபட |
| ஆண்டாண்டு | அங்கங்கே |

உறைதலும் (உரியன்) வாசஞ் செய்தலு முரியர்.

('அறிந்த' முதல் 'அளவை' வரையில் ஒருதொடர்.)

| | |
|---|---|
| அறிந்த ஆறே | யானறிவித்த படியே |
| ஆண்டாண்டு | முன்சொல்லிய விடங்களில் |
| ஆயினு மாக | ஆயினுமாக (பிறவிடங்களிலாயினுமாக) |
| முந்துநீ கண்டுழி | முற்படநீ கண்டபொழுது, |
| காண்டக | அழகு தகும்படி |
| முகனமர்ந்து ஏத்தி | விரும்பித் துதித்து, |
| கை | (முன்) உன் கையை |
| தொழுஉ பரவி | தலைமேல் குவித்து வாழ்த்தி, |
| கால் | (பின்பு) அவர் திருவடி யானது |
| உற வணங்கி | உன் தலையிற்பொருந்தும்படி வணங்கி |
| நெடும் பெரும் | நீண்ட பெரிய |
| சிமயத்து | இமயமலைச்சாரலில் |
| நீலம் | கருங்குவளையையுடைய |

| | |
|---|---|
| பைம்சுனை | பசியசரவணப்பொய்கை யானது [ஐவருள் |
| ஐவருள் | நில நீர் வளி தீ விண் என்னு |
| ஒருவன் | அக்கினிபகவானது |
| அம் கை | அழகிய கையினின்றும் |
| ஏற்ப | தன்னிடத்தே ஏற்க |
| அறுவர்பயந்த | கார்த்திகைப் பெண்களறுவர் பாலூட்டிவளர்த்த |
| ஆறமர்செல்வ | ஆறுவடிவங்களும் ஒன்றாயமர்ந்த செல்வரே! |
| ஆல்கெழு | கல்லாலின் கீழிருந்த |
| கடவுள்புதல்வ | சிவனுடைய புத்திரரே! |
| மால்வரை | பெரிய மூங்கிலையுடைய |
| மலைமகள்மகனே | மலையரையன் மகளுடைய குமாரரே! |
| மாற்றோர்கூற்றே | பகைவருக்கு யமனே! |
| போர் | யுத்தத்தில் |
| வெல் | வெற்றியையுடைய |
| வெற்றி | மகிடாசுரனைவென்ற |
| கொற்றவை | துர்க்கையினுடைய |
| சிறுவ | புதல்வரே! |
| இழை அணி | ஆபரணங்களை அணிந்த |

| | |
|---|---|
| சிறப்பின் | தலைமையாகிய |
| பழையோள் | காடுகிழாளுடைய |
| குழவி | குமாரரே! |
| வணங்கு வில் | வளைந்தவில்லையும் |
| வானோர் | தேவர்களாகிய |
| தானை | சேனையையு முடைய |
| தலைவ | படைத்தலைவரே! |
| மாலைமார்ப | மாலையை யணிந்த மார்பையுடையவரே! |
| நூல் அறி புலவ | எல்லா நூலையுமறிந்த புலவரே! |
| செருவில் ஒருவ | போர்த்தொழிலில் ஒருவராய் நிற்பவரே! |
| பொரு | சண்டைசெய்கின்ற |
| விறல் மள்ள | வெற்றியையுடைய இளையவரே! |
| அந்தணர் | அழகிய தண்மையுடையவர்க்கு |
| வெறுக்கை | செல்வமாக நிற்பவரே! |
| அறிந்தோர் | சான்றோர்களால் |
| சொல் | சொல்லப்படும் புகழை |
| மலை | மலையா யுடையவரே! |
| மங்கையர் | தெய்வானையார் வள்ளிநாச்சியாராகிய மகளிர்க்கு |

| | |
|---|---|
| கணவ | மணவாளரே! |
| மைந்தர் ஏறே | வீரர்களுக்கு ரிஷபமே! |
| வேல் கெழு | வேல் பொருந்தின |
| தடம் கை | பெருமையாகிய கையினை யுடைய |
| சால் | நிறைந்த |
| பெரும் செல்வ | பெரிய செல்வரே! |
| குன்றம் கொன்ற | மலையைப் பிளந்த |
| குன்றா கொற்றத்து | குறையாத வெற்றியையுடைய |
| விண் | தேவருலகத்தை |
| பொரு | தீண்டும் |
| நெடு வரை | நெடிய மலைகளை யுடைய |
| குறிஞ்சி | குறிஞ்சிநிலத்திற்கு |
| கிழவ | உரிமையை யுடையவரே! |
| பலர் புகழ் | பலரும் புகழும் |
| நன்மொழி | நல்லசொற்களையுடைய |
| புலவர் ஏறே | பரசமய யானைகளுக்கு சிங்க ஏறு போல்பவரே! |
| பெறல் அரும் | பிறருக்குப் பெறுதற்கரிய |
| மரபின் | முறைமையினையுடைய |
| பெரும்பெயர் முருக | பெரிய பொருளாகிய வீட்டை யுடைய முருகரே! |

# திருமுருகாற்றுப்படை.

| | |
|---|---|
| நசையினர்க்கு | அவ்வீட்டைப் பெறவேண்டி நச்சி வந்தார்க்கு |
| ஆர்த்தும் | அணைக்கூட்டுவிக்கும் |
| பேர் இசை | பெரிய புகழை |
| ஆள | ஆளுந்தலையுடையவரே! |
| அலந்தோர்க்கு | (பிறரால்) துன்பப்பட்டு வந்தோர்க்கு |
| அளிக்கும் | கிருபைசெய்யும் |
| (சேஎய்) | சுப்பிரமண்ணியரே ! |
| மண்டு | நெருங்கின |
| அமர் கடந்த | சண்டையை முடித்த |
| வென்று ஆடு | வென்றாடுகின்ற |
| நின் அகலத்து | உமது மார்பிடத்து |
| பொலம் | பொன்னாற்செய்த |
| பூண் சேஎய் | ஆபரணத்தை யணிந்தவரே! |
| பரிசிலர் | இரந்துவந்தோரை |
| தாங்கும் | பாதுகாக்கும் |
| உரு கெழு | நிறம் விளங்கிய |
| நெடு வேள் | நெடியவேளே ! |
| பெரியோர் ஏத்தும் | தேவரு முனிவருந் துதிக்கும் |
| பெரும் பெயர் | பெரிய திருநாமத்தையுடைய |
| இயவுள் | தலைவரே ! |

no change

Change only in this page

| | |
|---|---|
| சூர் மருங்கு | சூரனுடைய குலத்தை |
| அறுத்த | நாசமாக்கிய |
| மொய்ம்பின் | வலிமையால் |
| மதவலி | மதவலி யென்னும் பெயரையுடையவரே! |
| போர் மிகு | போர்த்தொழிலில் மிக்கு |
| பொருந | திண்ணியரே! |
| குரிசில் | தலைவரே! |
| என | என்று |
| யானறி அளவையின் | யானறிந்து சொல்லிய அளவானும் (நீயறிந்த அளவானும்) |
| ஆனாது | நீங்காது |
| பல ஏத்தி | பலவற்றையுஞ் சொல்லிப்புகழ்ந்து |
| நின் அளந்து | உமது தன்மையை முற்றவளந்து |
| அறிதல் | அறிதல் |
| மன் உயிர்க்கு | நிலைபெற்ற உயிர்களுக்கு |
| அருமையின் | அரிதாகையால் |
| நின் அடி உள்ளி | உம்முடைய திருவடியை(பெறல்வேண்டி) நினைந்து |
| வந்தனன் | வந்தேன் |
| நின்னொடு | உம்மோடு |

| | |
|---|---|
| புரைகுநர் இல்லா | ஒப்பவர் இல்லாத யோய் |
| புலமையோய் | மெஞ்ஞானத்தையுடையவரே |
| என | என்று சொல்லி |
| குறித்தது | நீயெண்ணிய மோட்சத்தை |
| மொழியா | விண்ணப்பஞ்செய்வதற்கு |
| அளவையில் | முன்னே, |

'குறித்து' முதல் 'ஏத்தி' வரையில் ஒரு தொடர்.

| | |
|---|---|
| வேறு | வேறுவேறாகிய |
| பல் உருவின் | பல உருவத்தையுடைய |
| குறும் | சிறிய |
| பல் கூளியர் உடன் | பலராகிய பரிசனர்கள் சேர |
| குறித்து | நினைத்து |
| சாறு அயர்களத்து | திருவிழாவை எடுத்த இடத்து |
| வீறுபெறத் தோன்றி | தாங்கள் பொலிவுபெறத் தோன்றி |
| பெரும | பெருமானே! |
| முது வாய் | அறிவுமுதிர்ந்த வாயையுடைய |
| இரவலன் | காப்பாற்றத் தக்கவன் |
| நின் | உமது |
| வண் புகழ் நயந்து | அழகிய புகழை விரும்பி |
| இனியவும் | கேட்போர்க்கினியவும் |
| நல்லவும் | உறுதி பயப்பனவுமாக |
| நனி பல | மிக்க பலவற்றை |
| ஏத்தி | வாழ்த்தி |

| | |
|---|---|
| வந்தோன் | வந்தோனாதலால் |
| அளியன் தானே | அவன் உம்மால் காக்கப்படத் தக்கவனே |
| என் | என்று கூற, |

'தெய்வம்' முதல் 'நல்குமதி' வரையில் ஒரு தொடர்.

| | |
|---|---|
| தெய்வம் சான்ற | தெய்வத்தன்மை யமைந்த |
| திறல் விளங்கு | வலிமைவிளங்கும் |
| உருவின் | உருவத்தையும் |
| வான் தோய் | வானைத் தீண்டும் |
| நிவப்பின் | உயர்ச்சியையு முடைய |
| தான் வந்து எய்தி | தாம் வந் தணுகி, |
| அணங்கு சால் | அச்சம் பொருந்திய |
| உயர் நிலை | தெய்வத்தன்மையை |
| தழீஇ | உள்ளடக்கிக்கொண்டு, |
| மணம் கமழ் | வாசனை வீசுகின்ற |
| தெய்வத்து | தெய்வத் தன்மையையுடைய |
| பண்டை | முன்புண்டாகிய |
| தன் | தமது |
| இள நலம் காட்டி | இளைய வடிவைக் காட்டி |
| நின் வரவு | நீ மோட்சம் பெறவந்ததை |
| அறிவல் | நாம் முன்னமே யறிவோம் |

# திருமுருகாற்றுப்படை.

| | |
|---|---|
| அஞ்சல் | அது நினக்குக் கிடைத்தல் அரிதென்று பயப்படுதலை |
| ஓம்புமதி என | பரிகரி என்று |
| அன்பு உடை | நின்மேல் அன்புடைத்தாகிய |
| நன்மொழி | நல்லவார்த்தையை |
| அளைஇ | பலகாலுங் கலந்து பேசி, |
| இருள் நிறம் | இருண்ட நிறத்தையுடைய |
| முந்நீர் வளைஇய | கடல் சூழ்ந்த |
| உலகத்து | உலகத்தினிடத்தே |
| ஒரு நீ ஆக | நீ யொருவனே (பிறர்க்கு மோக்ஷங்கொடுத்தற்கு) உரியனாக |
| விளிவு இன்று | கேடின்றி |
| தோன்ற | தோன்றும்படி |
| விழுமிய | மேலாகிய |
| பெறலரும் | பிறரால் பெறுதற்கரிய |
| பரிசில் நல்குமதி | திருவருளாகிய பரிசிலைத் தந்தருளுவார். |

'பலவுடன்' முதல் 'கிழவோனே' வரையில் ஒருதொடர்.

| | |
|---|---|
| வேறு பல் | வேறுபட்ட பலவாகிய |
| துகிலின் | வஸ்திரக்கொடிபோல் |
| பலவுடன் நுடங்கி | தாம் பலவுங் கூடி அசைந்து, |
| அகில் | அகில்மரத்தை |

| | |
|---|---|
| சுமந்து | மேற்கொண்டு, |
| ஆரம் | சந்தனமாகிய |
| முழுமுதல் உருட்டி | பெரிய மரத்தைத் தள்ளி, |
| வேரல் | சிறுமூங்கிலினது |
| பூவுடை | பூவுடைத்தாகிய |
| அலங்கு | அசைகின்ற |
| சினை | கொம்புகள் |
| புலம்ப | அலப்ப |
| வேர் கீண்டு | வேரைப் பிளந்து, |
| விண்பொரு | தேவருலகத்தைத் தொடுகின்ற |
| நெடுவரை | நீண்ட மலையிடத்து |
| பரிதியின் | சூரியமண்டலத்தைப்போல |
| தொடுத்த | வைக்கப்பட்ட |
| தண் | குளிர்ந்த |
| கமழ் | மணக்கின்ற |
| மலர் இறால் | பெருத்த தேன்கூடுகள் |
| சிதைய | கெட, |
| நன் பல ஆசினி | நன்றாகிய பல பலாமரத்தினது |
| முது சுளை | முதிர்ந்த சுளைகள் |
| கலாவ | தம்மிடத்துக் கலக்க, |
| மீமிசை | மலையினுச்சியிலுண்டான |
| நாகம் | சுரபுன்னையினது |

| | |
|---|---|
| நறு/மலர்/உதிர | மணக்கின்ற/பூக்கள்/உதிர, |
| யூகமொடு | கருங்குரங்கோடு [ப |
| மா/முகம் | கருமையாகிய/முகத்தையுடை |
| முசுக்கலை/பனிப்ப | முசுக்களும் நடுங்க, |
| பூ/நுதல் | அழகிய/மத்தககதலையுடை |
| இரும்/பிடி | பெரிய பெண்யானை |
| குளிர்ப்ப/வீசி | குளிரும்படி/வீசி, |
| பெரும் களிற்று | பெரிய/யானையினது |
| முத்து உடை | முத்தையுடைய |
| வான்/கோடு | வெளுத்த/கொம்புகளை |
| தழீஇ | உள்ளடக்கி, |
| நன் பொன் | நல்ல பொன்னும் |
| மணி | இரத்தினமும் |
| நிறம்/கிளர் | நிறம் விளங்கும்படி |
| தத்துற்று | குதித்து, (துக்கி, |
| பொன்/கொழியா | (பொடியாகிய) பொன்னை யா |
| வாழை | வாழையினது |
| முழு/முதல் | பெரியமரம் |
| துமிய | துணியும் படிக்கும் |
| தாழை | தென்னமரத்தினது |
| இளநீர்/விழுகுலை | இளநீராகிய/பெரிய குலை |
| உதிர/தாக்கி | உதிரும்படிக்கும் மோதி |

| | |
|---|---|
| கறி கொடி | மிளகு கொடியின் |
| கரும் துணர் சாய | கரிய பூங்கொத்துக்கள் சாய, |
| பொறி புறம் | பீலியையுடைய இடத்தினையும் |
| மடம் | மடப்பம் பொருந்திய |
| நடை | நடையையுமுடைய |
| மஞ்ஞை பலவுடன் | மயில்கள் பலவற்றோடு |
| வயம் | வலிமையாகிய. |
| கோழி பெடை | கோழிப்பெட்டைகள் |
| வெரீஇ | பயந்து ஓட |
| கேழ லோடு | ஆண்பன்றியுடனே |
| வெளிற்று இன் | உள்ளே வெளுப்பையுடைய |
| இரும் பனை | கரிய பனையினது |
| புன் | புல்லிய |
| சாயன்ன | செதும்பையொத்த |
| குரூஉ | கருநிறம் பொருந்திய |
| மயிர் | மயிரினையுடைய |
| யாக்கை | உடம்பினையும் |
| குடா வடி | வளைந்த வடிவினையுமுடைய |
| உளியம் | கரடிகள் |
| பெரும் | பெரிய |

| | |
|---|---|
| கல் விடர் | கல்லினது முழைகளில் |
| அளைச்செறிய | சேர, |
| கரும் கோட்டு | கரிய கொம்புகளை யுடைய |
| ஆமா | காட்டு மாட்டின் |
| நல் ஏறு | நன்மையாகிய ரிஷபங்கள் |
| சிலைப்ப | முழங்க, |
| சேண் நின்று | மலையினுச்சியில் நின்றும் |
| இழுமென | இழுமென்னு மோசைபட |
| இழிதரும் | குதிக்கும் |
| அருவி | அருவிகளையுடைய |
| பழம் முதிர் சோலை | பழம் முதிர் சோலை |
| மலை | மலைக்கு |
| கிழவோன் | உரிமையுடைய அம் முருகக் கடவுள். (என்றவாறு.) |

'விழவினும், நிலையினும், களனும், காடும், காவும், துருத்தியும், யாறும், குளனும், பல்வைப்பும், சதுக்கமும், சந்தியும், கடம்பும், மன்றமும், பொதியினும், நிலையினும்,' உறைதலு முரியன்.

'ஆண்டினும், வேண்டினர் [illegible] ஆண்டாண்டு [illegible]'

'ஆண்டாண்டாயினுமாக.'

'நீ கண்டுழி ஏத்தி, பரவி, வணங்கி, செல்வ! புதல்வ! மகனே! கூற்றே! சிறுவ! குழவி! தலைவ! மார்ப! புலவ! ஒருவ! மன்ள! வெறுக்கை! சொன்மலை! கணவ! ஏறே! செல்வ! கிழவ! ஏறே! முருக! ஆள! சேஎய்! வேள் இயவுள்! மதவலி! பொருந்! குரிசில்! என பலவேத்தி; 'நின்னடியுள்ளி வந்தனன்' என, 'குறித்தது மொழியா அளவையின்' இரவலன்' 'நின் வண்புகழ் நயந்து, ஏத்தி, வந்தோன்? ஆதலால் 'அளியன்றானே யென பழமுதிர் சோலை மலைகிழவோன்' தன் இள நலம்காட்டி நின் வரவு அறிவல், அஞ்சல் ஓம்புமதி யென, நன்மொழி அளைஇ பெறவரும் பரிசில் நல்குமதி'.

## திருமுருகாற்றுப்படை பதவுரை

## முற்றிற்று.

4673a

---

K. R. Press,—Madras.

# புத்தகவிளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| I. திருமுறை (1-7) ஸ்தலமுறைத்தேவாரம் ... | 5 | 0 | 0 |
| II. ஷை (8-11) திருவாசக முதலியன ... | 3 | 8 | 0 |
| III. திருமுறை (12) பெரியபுராணம் ... | 2 | 8 | 0 |
| ஷை மூன்றுவாலியம் மொத்தமாய் ... | 10 | 0 | 0 |
| திருக்கோவையார் பதவுரையுடன், திருக்கோவையாருண்மை ... ... ... | 1 | 12 | 0 |
| ஷை திருவாசகம் மூலத்துடன் ... ... | 2 | 0 | 0 |
| திருமுருகாற்றுப்படை (பிரதி பதவுரை.) ... | 0 | 3 | 0 |
| தேவபசுவின் படம் ... ... ... ... சிவதருமோத்திர கோபுர வியலின்படி ... | 0 | 2 | 0 |
| இராமாயண வசனச்சுருக்கம் 50 படத்துடன் ... | 0 | 8 | 0 |
| பாரதவசனச்சுருக்கம் 32 படத்துடன்... ... | 0 | 8 | 0 |

வேண்டியவர்கள் சென்னை தங்கசாலைவீதி 2[illegible]-விக்டோரியா அச்சுக்கூடத்திலும், தம்புசெட்டித்தெரு 289-வது நெம்பர் கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திலும், ஷை தெரு 273-ரியன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

[illegible] ம. செந்தில்வேலுமுதலியார்